




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 215 28.1.2026 WEDNESDAY THAI : 14 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 215 28.1.2026 புதன்கிழமை தை : 14 விலை : ரூ.5/–


## கருப்பைவாய் புற்றுநோயை தடுக்க

# “பள்ளி மாணவிகளுக்கு தடுப்பூசி!”

## முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

சென்னை: ஜன.28-

கருப்பைவாய் புற்றுநோயை தடுத்திடும் வகையில் 30 ஆயிரம் பள்ளி மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்த முதல்வர் மு.க. ஸ்டாலின், தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை வெளியிட்டார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: தமிழ்நாட்டில், ஆறு நோய்களை தடுப்பதற்கான விரிவுபடுத்தப்பட்ட தடுப்பூசி திட்டம் 1978 ல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்காக, நாடு தழுவிய தடுப்பூசி திட்டம் 1985ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. தடுப்பூசி திட்டத்தின் கீழ், 11 வகையான தடுப்பூசிகளை கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் அளித்து 12 வகையான தடுப்பூசியினால் தடுக்கப்படக்கூடிய நோய்களிலிருந்து பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 1.2 லட்சம் பெண்களுக்கு கருப்பைவாய்ப் புற்றுநோய் புதிதாக கண்டறியப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் பெண்களை பாதிக்கும் புற்றுநோய்களில் மார்பக புற்றுநோய்க்கு அடுத்தபடியாக, கருப்பைவாய் புற்றுநோய் கண்டறியப்பட்டு வருகிறது. ஹெச்.பி.வி வைரஸ் (HPV - Human Papilloma Virus) தொற்றின் காரணமாக ஏற்படும் கருப்பைவாய் புற்றுநோயை ஹெச்.பி.வி தடுப்பூசி செலுத்துவதின் மூலம் தடுக்க இயலும்.



HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை தொடங்கி வைத்தல்: தமிழ்நாடு அரசின் 2025 2026 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில், கருப்பைவாய் புற்றுநோயை தடுக்கவும், தமிழ்நாட்டில் அந்நோயினை அறவே அகற்றிடவும் HPV (Human Papilloma Virus) தடுப்பூசியை 14 வயதுடைய அனைத்து பெண் குழந்தைகளுக்கும் படிப்படியாக வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கென 2025 ஸ்ரீ 26 ஆம் ஆண்டில் 36 கோடி ஒதுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பின் தொடர்ச்சியாக, தடுப்பூசி திட்டத்தினை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்த 14 வயதுடைய 3,38,649 பெண் குழந்தைகளுக்கு HPV தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக (Pilot phase) கருப்பைவாய் புற்றுநோய் பாதிப்பு அதிகம் உள்ள தர்மபுரி, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய 4 மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அம்மாவட்டங்களில் உள்ள அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் 30,209 மாணவிகளுக்கு HPV (Human Papilloma Virus) தடுப்பூசி வழங்கும் திட்டத்தை முதல்வர் மு.க. ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக, மாநிலம் முழுவதும் உள்ள எஞ்சிய மாவட்டங்களில் உள்ள 14 வயதுடைய பெண் குழந்தைகளுக்கு இத்தடுப்பூசி செலுத்தப்படும்.

தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்க செயல்திட்ட ஆவணம் வெளியீடு (Tamil Nadu Cancer Care Mission): புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பை மேம்படுத்த தமிழ்நாடு அரசு கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து பல்வேறு முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கட்டமைப்பு மேம்பாடு, ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல், மற்றும் மேம்பட்ட சிகிச்சை வழங்குதல் உட்பட பல்வேறு அம்சங்கள் இதில் அடங்கும்.

புற்றுநோய் என்பது மக்களின் நலத்திற்கு பெரும் தீங்காக இருந்து வருகிறது. குறிப்பாக, வாழ்க்கைமுறை சார்ந்த மாற்றங்களால் ஏற்படும் புற்றுநோய்கள் அதிகரித்து வருவதால், ஒருங்கிணைக்கப்பட்ட விரிவான அணுகுமுறையை செயல்படுத்துவது அவசியமாகிறது.

தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்டுள்ள தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கமானது நோய் தடுப்பு, ஆரம்பநிலையில் கண்டறிதல், நோயறிதல், சிகிச்சை, வலி நிவாரண சிகிச்சை நீடித்த மற்றும் தரமான வாழ்வு ஆகியவற்றை உள்ளடக்கி, விரிவுபடுத்தி புற்றுநோயால் ஏற்படும் முன்கூட்டியே நிகழும் இறப்புகளைக் குறைப்பதை நோக்கமாக கொண்டுள்ளது.

ஒருங்கிணைந்த இந்த இயக்கத்தில், மேம்பட்ட தொழில்நுட்பங்கள், சமூகப் பங்களிப்பு மற்றும் புற்றுநோய் ஆராய்ச்சி ஆகியவற்றைப் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

புற்றுநோய் தாக்கத்தை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட இந்த புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் மூலம் வரும் 5 ஆண்டுகளில் பல தொலைநோக்கு மற்றும் புதுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக தமிழ்நாடு புற்றுநோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு இயக்கத்தின் செயல் திட்ட ஆவணத்தை முதல்வர் ஸ்டாலின் இன்றையதினம் வெளியிட்டார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், சமூக நலன் ஸ்ரீ மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் இ. கருணாநிதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## காட்டு மாடு தாக்கியதில் உயிரிழந்த குடும்பத்திற்கு அரசின் நிவாரணம் ரூ.10,00,000/அமைச்சர் ஐ பெரியசாமி வழங்கினார்

திண்டுக்கல், ஜன.28-

திண்டுக்கல் வனக் கோட்டம் ஸ்ரீ கன்னிவாடி வனச்சரகம் திண்டுக்கல் மாவட்டம், கன்னிவாடி வனச்சரக எல்லைக்குட்பட்ட ஆடலூர் கிராமத்தில், 09.12.2025 அன்று காட்டு மாடு தாக்கியதில், முருகன் (வயது 65) என்பவர் உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து வனத்துறையால் உடனடியாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அரசின் விதிமுறைகளின்படி இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதன்படி, உயிரிழந்த நபரின் குடும்பத்திற்கு அரசின் நிவாரணமாக ரூ.10,00,000/ (பத்து லட்சம் ரூபாய்) இழப்பீடு தொகை 26.01.2026 அன்று வழங்கப்பட்டது. இத்தொகை ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் பெரியசாமி அவர்களால், மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல் (மிதிஷி) நாக சதீஷ் கிடிஜாலா அவர்களின் உத்தரவின் பேரில் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின் போது குமரேசன், வனச்சரக அலுவலர் கன்னிவாடி அவர்கள் முன்னிலையில் மேற்கண்ட இழப்பீடு தொகை, உயிரிழந்த முருகன் அவர்களின் மனைவி ராக்கம்மாள் ஆடலூர் கிராமம் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும், இத்தகைய மனித - வனவிலங்கு மோதல்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் தடுக்கும் நோக்கில், மேற்கண்ட கிராமப் பகுதிகளில் RRT (Rapid Response Team) பணியாளர்கள் மூலம் 24/7 ரோந்து பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதோடு, ட்ரோன் தொழில்நுட்பம் பயன்படுத்தி இரவு மற்றும் பகல் நேரங்களில் தொடர்ந்து கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது.






## அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் தைப்பூசத் திருவிழா அறநிலையத்துறை அறிவிப்பு

பழனி, ஜன.28-

அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு பெரியநாயகியம்மன் திருக்கோயிலில் 2026 ஆம் ஆண்டு தைப்பூசத் திருவிழா 26.01.2026 இன்று கொடியேற்றத்துடன் துவங்கப்பட்டு 04.02.2026 வரை 10 நாட்கள் சிறப்பாக நடைபெறவுள்ளது.

மேற்படி திருவிழாவினை முன்னிட்டு 10 நாட்களுக்கு மேற்கு கிரிவீதி வின்ச் நிலையம், தெற்கு கிரிவீதி நாதஸ்வரப் பள்ளி ஆகிய இரண்டு இடங்களில் திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு தன்னார்வலர்கள் உதவியுடன் நாள்முழுவதும் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே, மலைக்கோயிலில் நாள்முழுவதும் அன்னதானம் தினமும் காலை 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை சுமார் 9,000க்கு மேலான பக்தர்களுக்கும், கலவை சாதம் அன்னதானம் தினமும் காலை 10.00 மணி முதல் 6.00 மணி வரை 10,000க்கு மேலான பக்தர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது.



மேலும், பாதயாத்திரையாக வரும் பக்தர்கள் பயன்பெறும் வகையில் தைப்பூசத் திருவிழா 10 நாட்களுக்கு திண்டுக்கல் சாலை, ஒட்டன்சத்திரம், அருள்மிகு குழந்தைவேலப்பர் திருக்கோயில் பக்தர்கள் ஓய்வுக் கூடத்தில் நாள் 1க்கு 16,000 பக்தர்களுக்கும், தாராபுரம் சாலை, கொங்கூர் பக்தர்கள் ஓய்வு கூடத்தில் நாள் 1க்கு 4,000 பக்தர்களுக்கும் நாள் 1க்கு மொத்தம் 20,000 பக்தர்களுக்கு திருக்கோயில் சார்பாக அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது.

மலைக்கோயிலில் பக்தர்களுக்கு பஞ்சாமிர்த பிரசாதம் தினமும் காலை நடைதிறப்பு முதல் திருக்கோயில் திருக்காப்பிடும் வரை வழங்கப்பட்டு வருகிறது. கட்டணமில்லாமல்

மலைக்கோயில் தெற்கு வெளிப்பிரகார மண்டபத்தில் தினமும் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை திருக்கோயில் மூலம் கைக்குழந்தைகளுக்கு காய்ச்சிய பால் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

மலைக்கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு படிப்பாதை மற்றும் யானைப்பாதை இணையும் இடத்தில் திருக்கோயில் சார்பாக தினமும் காலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை சுக்கு காபி கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

மலைக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய க்யூ வரிசை மற்றும் காத்திருப்பு கூடத்தில் காத்திருக்கும் நேரத்தில் திருக்கோயில் சார்பாக பிஸ்கட், தண்ணீர் பாட்டில்கள் கட்டணமில்லாமல் வழங்கப்பட்டு வருகிறது.

தைப்பூசத் திருவிழாவின் முக்கிய திருவிழா நாட்களான 6ஆம் நாள் (31.01.2026), (01.02.2026) 5 8 (02.02.2026) மூன்று நாட்களுக்கு இலட்சக்கணக்கான பக்தர்கள் குடமுழுக்கு நினைவரங்கம் வழியாக படியேறி செல்லும் பொழுதும், தரிசனத்திற்கு காத்திருக்கும் பொழுதும் பயன்பெறும் வகையில் பிஸ்கட், இனிப்பு பலகாரம், தண்ணீர் பாட்டில் அடங்கிய சிற்று பைகள் படியேறுவதற்கு முன்பாகவே வழங்கப்பட உள்ளது.

# ‘வாட்ஸ்அப் சாட்களை அக்சஸ் செய்யும் மெட்டா’ பயனர்கள் குற்றச்சாட்டும், பின்னணியும்!



நியூயார்க், ஜன.28-
வாட்ஸ்அப் பயனர்களின் சாட்களை மெட்டா நிறுவனம் கண்காணித்து வருவதாக உலக நாடுகளை சேர்ந்த வாட்ஸ்அப் பயனர்கள் சிலர் குற்றச்சாட்டு வைத்துள்ளனர். இது தொடர்பாக அமெரிக்க நீதிமன்றத்தில் அவர்கள் வழக்கும் தொடுத்துள்ளனர்.

மெட்டா நிறுவனத்தின் வாட்ஸ்அப் மெசஞ்சரை உலக அளவில் சுமார் 300 கோடிக்கும் மேற்பட்ட பயனர்கள் பயன்படுத்தி வருகின்றனர். டெக்ஸ்ட் மெசேஜ், போட்டோ, வீடியோ, ஆடியோ மற்றும் அழைப்புகளை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வருகிறது இந்தத் தளம். பள்ளிக்கூடம் தொடங்கி அலுவலகம் வரையில் இப்போது குழுக்களாக ஒருவருக்கு ஒருவர், ஒருவருக்கு பலர் என இதன் மூலம் தகவல்களை பரிமாறிக் கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில், மெட்டா நிறுவனம் வாட்ஸ்அப் பயனர்களுக்கு ‘எண்டு டூஎண்ட்’ என்கிரிப்ஷன் என்ற போலியான அம்சத்தை அறிவித்து பயனர்களை ஏமாற்றியதாக சொல்லி அமெரிக்காவில் அந்நிறுவனத்துக்கு எதிராக இந்தியா, ஆஸ்திரேலியா, பிரேசில், மெக்சிகோ, தென் ஆப்பிரிக்கா நாடுகளை சேர்ந்த வாட்ஸ்அப் பயனர்கள் சிலர் வழக்கு தொடுத்துள்ளனர்.

‘எண்டு டு எண்ட்’ என்கிரிப்ஷன் அம்சத்தின் மூலம் வாட்ஸ்அப்பில் மெசேஜை அனுப்பும் பயனர், அதை பெறுகின்ற பயனர் மட்டும் பார்க்க முடியும் என மெட்டா சொல்லி வருகிறது. இந்த சூழலில்தான் மெட்டா நிறுவனம் வாட்ஸ்அப் பயனர்களின் தகவல் தொடர்பு விவரங்களை சேமித்து, பகுப்பாய்வு செய்து, அதை விர்ச்சுவலாக அக்சஸ் செய்யவும் முடியும் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து வாட்ஸ்அப் பயனர்கள் வழக்கு தொடுத்துள்ளனர்.

இந்நிலையில், இந்த குற்றச்சாட்டு முற்றிலும் அபத்தமானது என மெட்டா எதிர்வினையாற்றி உள்ளது. இதற்கு மத்தியில் எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க், “வாட்ஸ்அப் பயனர்களுக்கு பாதுகாப்பானது அல்ல. சிக்னலையும் கேள்விக்கு உட்படுத்த வேண்டும். அதனால் பயனர்கள் எக்ஸ் சாட்டை பயன்படுத்தலாம்” என சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார். மெட்டா மீதான இந்த குற்றச்சாட்டு உலக அளவில் பேசுபொருளாகி உள்ளது.

# “ஜல்லிக்கட்டில் உயிரிழக்கும் வீரர் குடும்பத்துக்கு ரூ.10 லட்சம்” எடப்பாடி பழனிசாமி தேர்தல் வாக்குறுதி



நாமக்கல், ஜன.28-
ஜல்லிக்கட்டு போட்டிகளில் எதிர்பராத விதமாக காளைகள் முட்டி உயிரிழக்க நேரும் வீரர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.10 லட்சம் நிதியுதவி வழங்கப்படும் என அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தேர்தல் வாக்குறுதி அளித்துள்ளார்.

நாமக்கல் அருகே சாலப்பாளையம் கிராமத்தில் இன்று அதிமுக சார்பில் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெற்றது. அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஜல்லிக்கட்டு போட்டியை தொடங்கி வைத்துப் பேசியதாவது: அதிமுக ஆட்சி அமைந்தவுடன் ஜல்லிக்கட்டு போட்டியின்போது ஏதேச்சையாக காளைகள் முட்டி வீர்கள் உயிரிழக்க நேரிட்டால் அவர்களின் குடும்பங்களுக்கு ரூ.10 லட்சம் நிதி உதவி அளிக்கப்படும்.

ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்க பதிவு செய்யும் வீரர்களுக்கு இன்ஸ்சூரன்ஸ் செய்யப்படும். மேலும், ஜல்லிக்கட்டு காளைகளும் கணக்கிட்டு இன்சூரன்ஸ் செய்யப்படும். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி பேசினார். தொடர்ந்து நடைபெற்ற ஜல்லிக்கட்டு போட்டியில் 400க்கும் மேற்பட்ட மாடுபிடி வீரர்கள் தனித்தனி குழுக்களாக பிரிக்கப்பட்டு களத்தில் இறக்கப்பட்டனர்.

அவர்கள் வாடி வாசல் வழியாக சீறிப்பாய்ந்து வந்த காளைகளை தாவிப்பிடித்து அடக்கினர். மாடுகளை அடக்கிய வீரர்கள் மற்றும் மாடுபிடி வீரர்களின் பிடியில் சிக்காமல் சென்ற காளைகளுக்கு விழாக்குழுவினர் சார்பில் சைக்கிள், கட்டில் மெத்தை உள்ளிட்ட பல்வேறு பரிசுகள் வழங்கப்பட்டன. அதிமுக முன்னாள் அமைச்சர்கள் பி.தங்கமணி, வெ.சரோஜா, விஜயபாஸ்கர், முன்னாள் எம்எல்ஏகள் பாஸ்கர், சந்திரசேகர் உள்பட பலர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

# அமெரிக்காவில் பனிப்புயல் சுமார் 25 பேர் உயிரிழப்பு மின் வசதியின்றி மக்கள் தவிப்பு



நியூயார்க், ஜன.28-
அமெரிக்காவின் வடகிழக்கு பகுதியில் பனிப்புயல் பாதிப்பு காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை முடங்கியுள்ளது. ஆர்கன்சஸ் முதல் நியூ இங்கிலாந்து பகுதி வரை சுமார் 2,100 கிலோமீட்டர் பரப்பளவுக்கு சுமார் 1 அடி உயரத்துக்கு பனி சூழ்ந்துள்ளது. இதனால் சாலை மற்றும் வான் போக்குவரத்து முடங்கியுள்ளது.

இந்த பகுதியில் மின் வசதியின்றி கடும்குளிரான சூழலில் மக்கள் தவித்து வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. பனிப்பொழிவால் மின் கம்பங்கள் மற்றும் மின்சாரத்தை கடத்தும் கம்பிகள் சேதமடைந்துள்ளதாக மின்தடை குறித்து தகவல் அளிக்கும் poweroutage.com தெரிவித்துள்ளது.

பனிப்புயல் காரணமாக சுமார் 25 பேர் உயிரிழந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இதில் சுமார் 8 பேர் வீட்டை விட்டு வெளியில் வந்திருந்த போது உயிரிழந்ததாக காவல் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

பிட்ஸ்பர்க் பகுதியின் வடக்கே மைனஸ் 31 டிகிரி செல்சியஸ் என்ற சூழல் நிலவுவதாக அந்நாட்டின் தேசிய வானிலை சேவை மையம் தெரிவித்துள்ளது. ஓஹியோ, டெக்சாஸ், மாசசூசெட்ஸ், மிசிசிப்பி, டென்னசி உள்ளிட்ட பகுதிகளிலும் பனிப்புயல் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 1994க்கு பிறகு மிக மோசமான பனிப்புயல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. போர்வை, குடிநீர் மற்றும் ஜெனரேட்டர்களுடன் பனியின் தாக்கம் அதிகம் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள பாதுகாப்பு நிலையங்களுக்கு அதிகாரிகள் சென்றுள்ளதாக தகவல்.

8,000 விமானங்கள் ரத்து: மோசமான வானிலை காரணமாக அமெரிக்கா முழுவதும் சுமார் 8,000 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று மட்டும் சுமார் 45 சதவீத விமான சேவைகள் ரத்தாகின. இந்நிலையில், பனியின் தாக்கம் தொடரும் என வானிலை மையம் தெரிவித்துள்ளது.

# “கரூர் சம்பவத்தை வைத்து பாஜக மிரட்ட முயல்கிறது” தவெக அருண்ராஜ் குற்றச்சாட்டு



நாமக்கல், ஜன.28-
"கரூர் சம்பவத்தை வைத்து பாஜக இன்புளூயன்ஸ் செய்கிறதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது" என தவெக கொள்கை பரப்பு பொதுச்செயலாளர் அருண்ராஜ் தெரிவித்தார்.


திருச்செங்கோடு கருவேப்பம்பட்டியில் நேற்று இரவு டென்னிஸ் பால் டர்ப் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இதில் பங்கேற்ற தவெக கொள்கை பரப்பு பொதுச்செயலாளர் அருண்ராஜ் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: கரூர் சம்பவம் குறித்து சிபிஐ விசாரணை நடைபெற்று வரும் நிலையில் இதுதொடர்பாக பாஜக முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் பேசியிருப்பது அவர்கள் இந்த விவகாரத்தில் இன்புளூயன்ஸ் செய்கிறார்களோ என்ற எண்ணத்தை ஏற்படுத்தி உள்ளது. அதேவேளையில் மிரட்ட முயற்சிக்கிறார்கள் எனவும் கருதலாம். தவெகவுக்கும், திமுகவுக்கும் தான் போட்டி நிலவுகிறது. களத்தில் உள்ளவர்களோடுதான் நாங்கள் போட்டியிட முடியும். களத்தில் இல்லாதவர்கள் (அதிமுக ஐடி விங் அறிக்கை தொடர்பாக) சொல்வது பற்றி கவலை இல்லை.

அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், விஜய் குறித்து முன்பு என்ன பேசினார். இப்போது என்ன பேசுகிறார் என்பதை எல்லாம் ஊடகங்கள்தான் பார்க்க வேண்டும். சட்டப்பேரவையில் செல்வப்பெருந்தகை ‘விசில் சத்தம் பறக்கிறது எனக் கூறுகிறாரே, கூட்டணிக்கு வருகிற சிக்னல் என்று எடுத்துக் கொள்ளலாமா?’ என்ற கேள்விக்கு ‘பொறுத்திருந்து பாருங்கள்’ எனக் கூறினார்.

‘திருச்சி காங்கிரஸில் இருந்து தலைவர்கள் பலர் தவெகவில் இணைய உள்ளதாக செய்திகள் பரவுகிறதே’ என்ற கேள்விக்கு, ‘இணைந்தால் நல்லது தான். உங்களுக்கு தெரியாமல் நடக்கவா போகிறது. நடக்கும்போது பார்த்துக் கொள்ளலாம்’ என்றார். திரைப்பட நடிகர் ஸ்ரீநாத் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.





# பத்ரிநாத், கேதார்நாத் கோயில்களில் இந்து அல்லாதோருக்கு தடை விதிக்க தீர்மானம்

புதுடெல்லி, ஜன.28-
பாஜக ஆளும் உத்தராகண்டின் முக்கிய புனிதத்தலங்களாக பத்ரிநாத், கேதார்நாத் கோயில்கள் உள்ளன. இக்கோயில்களுக்கு ஏராளமான இந்துக்கள் வந்து வழிபடுகின்றனர்.

இவர்களுடன் சுற்றுலாப் பயணிகள், வியாபாரிகள் உள்ளிட்டோரும் வருவதுண்டு. இவர்களில் இந்து அல்லாதோரும் வந்து செல்வதால் கோயில்களின் புனிதத் தன்மை பாதிக்கப்படுவதாகக் கருதப்படுகிறது. இதற்காக பத்ரிநாத், கேதார்நாத் கோயில்களின் நிர்வாகக் கமிட்டி (பிகேடிசி) புதிய தீர்மானம் கொண்டுவர இருக்கிறது.

இதுகுறித்து பிகேடிசியின் தலைவர் ஹேமந்த் துவேதி கூறுகையில், ”இரண்டு கோயில்களின் புனிதத் தன்மையைப் பேணுவதற்காக முக்கிய முடிவு எடுக்கப்பட உள்ளது. இது குறித்து வரவிருக்கும் கூட்டத்தில் முறையாகத் தீர்மானம் கொண்டுவர இருக்கிறோம். பத்ரிநாத், கேதார்நாத்துடன் அதன் துணைக் கோயில்களிலும் இந்துக்கள் அல்லாதோர் நுழைய முழுமையாக தடை விதிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்படும்” என்றார்.

பத்ரிநாத் மற்றும் கேதார்நாத் பகுதிகளைச் சுற்றிலும் சட்டவிரோத வழிபாட்டுத் தலங்களும் உள்ளன. இவற்றை அகற்றிட உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமி எடுக்கும் நடவடிக்கையை பாராட்டியும் பிகேடிசியில் தீர்மானம் கொண்டுவரப்பட உள்ளது.

இதுகுறித்து உத்தராகண்ட் பாஜக மூத்த தலைவருமான ஹேமந்த் துவேதி கூறுகையில், “தேவபூமியான உத்தராகண்டின் மதம் மற்றும் கலாச்சார மரபுகளைப் பாதுகாப்பது முக்கிய கடமை. கேதார் கண்டம் முதல் மானஸ் கண்டம் வரையிலான கோயில் சங்கிலியில் பாரம்பரியமாக இந்துக்கள் அல்லாதோர் நுழைவதற்குத் தடை இருந்தது.

ஆனால் உத்தராகண்டில் பாஜக அல்லாத அரசின் (காங்கிரஸ்) ஆட்சியில் இந்த மரபுகள் மீறப்பட்டுள்ளன. எனவே, இந்த மரபுகள் முறையாகப் பின்பற்றப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கும் முதல்வர் புஷ்கர் சிங் தாமி பாராட்டுக்குரியவர். நாட்டின் முதல் மாநிலமாக இங்கு பொது சிவில் சட்டம் அமலாக்கம், கடுமையான கள்ளநோட்டு தடுப்புச் சட்டம் போன்ற நடவடிக்கைகளும் பாராட்டுக்குரியவை” என்றார்.

# போராட்டத்தை ஒடுக்கிய வழக்கில் 3 வங்கதேச அதிகாரிகளுக்கு மரண தண்டனை




டாக்கா, ஜன.28-
வங்கதேசத்தில் கடந்த 2024 ஜூலையில் இடஒதுக்கீட்டில் திருத்தம் கோரி மாணவர்கள் தொடங்கிய போராட்டம் மிகப்பெரிய கிளர்ச்சியாக மாறியது.

அப்போது பிரதமராக இருந்த ஷேக் ஹசீனாவின் அரசு கடும் ஒடுக்குமுறையில் ஈடுபட்டது. இதில் பலர் கொல்லப்பட்டனர். அப்போது நிகழ்ந்த மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் குறித்து டாக்காவில் உள்ள சர்வதேச குற்றவியல் தீர்ப்பாயம் விசாரித்து வருகிறது. இதில் இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ள முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா, முன்னாள் உள்துறை அமைச்சர் அசாதுசாமான் கான் கமால் ஆகியோருக்கு கடந்த நவம்பரில் மரண தண்டனை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் மாணவர்கள் கிளர்ச்சியின்போது டாக்காவின் சங்கர்புல் பகுதியில் 6 பேர் கொல்லப்பட்ட ஒரு வழக்கில் முன்னாள் டாக்கா பெருநகர காவல் ஆணையர் ஹபிபுர் ரஹ்மான், முன்னாள் இணை ஆணையர் சுதீப் குமார் சக்ரவர்த்தி, முன்னாள் கூடுதல் துணை ஆணையர் ஷா ஆலம் முகமது அக்தருல் இஸ்லாம் ஆகியோருக்கு நேற்று மரண தண்டனை விதிக்கப்பட்டது.

மூவரும் தலைமறைவாக உள்ள நிலையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தலைமறைவாக உள்ள ஒருவர் உட்பட 5 முன்னாள் காவல் அதிகாரிகளுக்கு வெவ்வேறு கால அளவில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஹசீனாவின் ஆட்சி அகற்றப்பட்ட பிறகு வங்கதேச பொதுத் தேர்தல் வரும் பிப்ரவரி 12ல் நடைபெற உள்ளது. இந்நிலையில் இத்தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# பெரம்பலூரில் போலீஸ் என்கவுன்ட்டர் ரவுடி கொட்டு ராஜா உயிரிழப்பு





பெரம்பலூர், ஜன.28-
பெரம்பலூர் அருகே போலீஸார் நடத்திய என்கவுன்ட்டரில் கொட்டு ராஜா என்கிற அழகுராஜா என்ற ரவுடி சுட்டுக் கொல்லப்பட்டார்.

முன்னதாக, கடந்த 24ம் தேதி பெரம்பலூரில் போலீஸ் வேனில் அழைத்துச் சென்ற பிரபல ரவுடி வெள்ளைக் காளி மீது நாட்டு வெடிகுண்டு வீசி கொலை செய்ய முயன்ற சம்பவத்தில் கொட்டு ராஜா முயற்சித்திருந்தார்.

குற்ற வழக்குகள் தொடர்பாக ரவுடி வெள்ளைக் காளியை, திண்டுக்கல் மற்றும் புதுக்கோட்டை நீதிமன்றங்களுக்கு போலீஸார் அழைத்துச் சென்றுவிட்டு மீண்டும் சென்னைக்கு வேனில் அழைத்துச் சென்று கொண்டிருந்தனர். அந்த வேனில் வெள்ளைக் காளி மற்றும் 10 போலீஸார் சென்றனர்.

அப்போது பெரம்பலூர் மாவட்டம் எறையூர் சுங்கச் சாவடி அருகே வேனை நிறுத்தி, ஒரு ஓட்டலில் சாப்பிடுவதற்காக வெள்ளைக் காளியுடன் போலீஸார் நடந்து சென்றனர். அப்போது போலீஸ் வாகனத்தை பின்தொடர்ந்து 2 கார்களில் வந்த 15 பேர் கொண்ட கும்பல், திடீரென வெள்ளைக் காளி மீது நாட்டு வெடிகுண்டுகளை வீசியது. இதில், காளி அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். இதில் 3 போலீஸார் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தை தொடர்ந்து நாட்டு வெடிகுண்டு வீசிய கும்பலை பிடிக்க 5 தனிப்படை அமைக்கப்பட்டது. இந்நிலையில், இந்த சம்பவத்தில் தொடர்புடைய கொட்டு ராஜா என்ற ரவுடியை போலீஸார் நேற்று கைது செய்தனர். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் ஆயுதங்கள் மற்றும் நாட்டு வெடிகுண்டுகளை பெரம்பலூர் திருமாந்துறை வனப்பகுதியில் வைத்துள்ளதாக தெரியவந்தது. அதை கைப்பற்ற போலீஸார் அங்கு கொட்டு ராஜாவை அழைத்து சென்றுள்ளனர்.

அப்போது காவல் துறை வாகனம் மீது வெடிகுண்டு வீசியும், போலீஸ் எஸ்ஐ சங்கரை அரிவாளால் வெட்டிவிட்டு தப்பிக்க அவர் முயற்சித்துள்ளார். இதையடுத்து காவல் துறை ஆய்வாளர் நந்தகுமார் கொட்டு ராஜாவை துப்பாக்கியால் சுட்டதில் உயிரிழந்தார் என்று போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஈரானை தாக்க தயாராகிறதா அமெரிக்கா? மத்திய கிழக்குக்கு வந்த விமானம் தாங்கி போர்க்கப்பல்கள்!



தெஹ்ரான், ஜன.28-
ஈரானுடனான உறவில் பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்க கடற்படையின் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க் கப்பல் மத்திய கிழக்கு கடல் பகுதிக்குள் நுழைந்துள்ளது. இது அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், ஈரான் மீது வான்வழித் தாக்குதலுக்கு உத்தரவிடக்கூடும் என்ற யூகங்களை உருவாக்கியுள்ளது.

அமெரிக்கா ஈரான் இடையிலான உறவில் கடும் பதற்றம் நிலவி வருகிறது. இந்த சூழலில், இந்தோபசிபிக் பகுதியில் இருந்து அனுப்பப்பட்ட அமெரிக்க கடற்படையின் ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க் கப்பல், நேற்று (திங்கட்கிழமை) மத்திய கிழக்கு கடல் பகுதிக்குள் நுழைந்தது.

நிமிட்ஸ் அணுசக்தி மூலம் இயங்கும் விமானம் தாங்கி போர்க் கப்பலான யுஎஸ்எஸ் ஆபிரகாம் லிங்கன் மற்றும் கேரியர் ஸ்ட்ரைக் குரூப் 3இன் முதன்மை போர்க் கப்பல், ஜனவரி 19 அன்று மலாக்கா நீரிணை வழியாக மத்திய கிழக்கு பகுதிக்கு புறப்பட்டுச் சென்றன. இந்த பயணத்தின்போது, இக்கப்பல்களுக்கு மூன்று ஆர்லே பர்க் ஏவுகணை அழிப்புக் கப்பல்களான யுஎஸ்எஸ் ஃபிராங்க் இ. பீட்டர்சன் ஜூனியர் (DDG-121), யுஎஸ்எஸ் ஸ்ப்ரூயன்ஸ் (DDG-111) மற்றும் யுஎஸ்எஸ் மைக்கேல் மர்பி (DDG 112) ஆகியவை பாதுகாப்பு வழங்கின.

சமூக ஊடகத்தில் அமெரிக்க மத்திய கட்டளைப் பிரிவு வெளியிட்ட ஒரு பதிவில், ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க்கப்பலும் அதன் தாக்குதல் குழுவும் பிராந்திய பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மேம்படுத்துவதற்காக தற்போது மத்திய கிழக்கில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான் மீதான அழுத்தத்தை அதிகரிக்க ட்ரம்ப் முடிவு செய்தால், இந்த விமானம் தாங்கி போர்க் கப்பல் மூலம் தாக்குதல் நடத்தப்படும் என தகவல் வெளியாகியுள்ளது. அதே நேரத்தில், எந்தவொரு தாக்குதலுக்கும் பலமான பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரானியத் தலைமை எச்சரித்துள்ளது. இது மத்திய கிழக்கு மற்றும் அதற்கு அருகில் உள்ள நாடுகளில் பதற்றத்தை உருவாகியுள்ளது.

கடந்த வாரம் செய்தியாளர்களிடம் பேசிய ட்ரம்ப், “இந்த போர்க் கப்பல்கள் மற்றும் எங்களின் பிரம்மாண்டமான கடற்படை முன்னெச்சரிக்கைக்காக அனுப்பப்பட்டது. ஒருவேளை அதை நாங்கள் பயன்படுத்த வேண்டியிருக்காது" என்று கூறியிருந்தார்



## தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் போளூர் வட்டக் கிளை 4 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

போளூர், ஜன.28-

தமிழ்நாடு அரசு அனைத்து துறை ஓய்வூதியர் சங்கம் போளூர் வட்டக் கிளை 4 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி, சார்நிலை கருவூலகம் எதிரில் வட்டத் தலைவர் க.அபிபுல்லாகான் தலைமையில் நடைபெற்றது.

*கோரிக்கைகள் :*

1 அகவை எழுவது அடைந்த அனைவருக்கும் கூடுதல் ஓய்வூதியம் 10% வழங்கிடுக.

2 சத்துணவு அங்கன்வாடி ஓய்வூதியர்கள் மற்றும் அவர்தம் நிலையில் உள்ளவர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச ஓய்வூதியம் 7 850 வழங்கிடுக.

3 கம்யூடேஷன் பிடித்த காலத்தை 10 ஆண்டுகளாக குறைத்திடுக.

4 மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் குறைகள் களைத்து காசில்லா மருத்துவத்தை மருத்துவத்தை உறுதி செய்திடுக.

வரவேற்புரை சி.குமரேசன் வட்ட துணைத் தலைவர், முன்னிலை கே. குப்பன் எம். மணி, முகமது கௌஸ் , சந்திரசேகர், செழியன், துவக்க உரை சி. ஜெகநாதன் மு.மாவட்டதுணைத் தலைவர்., கோரிக்கை விளக்க உரை கே.பாலு வட்ட செயலாளர், வாழ்த்துரை உதயகுமார், வீரமுத்து, பூ. கருணாநிதி, ஆர். அண்ணாமலை, அல்போன்ஸ், மஞ்சுளா, நிம்மி ஜான்,. நிறைவுறை மாவட்ட பொருளாளர்அ. ஆனந்தன், நன்றி உரை மணி துணைத் தலைவர். ஓய்வூதியர்கள் வட்டநிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

## ஜல்லிகட்டில் சிறந்த மாடுபிடி வீரர்களுக்கு இரண்டு புல்லட் வழங்கிய தவெகவினர்

அலங்காநல்லூர், ஜன.28.-

தமிழக வெற்றிக்கழகம் சார்பில் அலங்காநல்லூர், பாலமேடு ஜல்லிகட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு இரு சக்கர வாகனங்கள் பரிசளிக்கும் விழா கீழ நெடுங்குளம் பகுதியில் நடைபெற்றது. தவெக விவசாய அணி தலைவர் ஜோயல்சாம் ஆசீர் தலைமை தாங்கினார். தொழிலதிபர்கள் ராஜாங்கம், மேலமாசி வீதி கார்த்திகேயன், அமல்ராஜ், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.





இதில் அலங்காநல்லூர் ஜல்லிகட்டில் அதிக காளைகளை பிடித்து சிறந்த வீரராக தேர்வான கருப்பாயூரணி கார்த்திக், மற்றும் பாலமேடு ஜல்லிகட்டு போட்டியில் 16 காளைகளை பிடித்த வீரர் பொதும்பு பிரபாகரன் ஆகிய இருவருக்கும் தவெக சார்பில் இரண்டு புல்லட் பைக் வழங்கப்பட்டது.

பின்னர் ஜனநாயகன் சமத்துவ பொங்கல்விழா கொண்டாடப்பட்டது. விழாவில் பெண்களுக்கான கோலப் போட்டி நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற பெண்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது. வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் விசில் சின்னம் அதிக தொகுதிகளில் வெற்றி பெற தொண்டர்கள் பாடுபட வேண்டும் என கட்சியினர், தொண்டர்கள் உறுதிமொழியேற்றனர்.

கூட்டத்தில் ஏராளமான பெண்கள், தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டு பொங்கல் வைத்து கொண்டாடினர்.



■ திருப்பூர் மாவட்டம் சிக்கண்ணா அரசு கல்லூரி வளாகம், தமிழ்நாடு மேம்பாட்டு ஆணைய மாவட்ட விளையாட்டு அரங்கில், நடைபெற்ற குடியரசு தின விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் மனிஷ் நாரணவரே, சமாதானத்தை வலியுறுத்தும் வகையில், வண்ண பலூன்களை வானில் பறக்க விட்டார்கள். உடன் மாநகர காவல் ஆணையர் எஸ். ராஜேந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ்கிரீஸ் அசோக், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் க. சங்கமித்திரை ஆகியோர் உடன் உள்ளனர்.

## சென்னை அடையாறில் சாலையோரமாக சாக்கு மூட்டையில் இளைஞர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் ஒருவர் கைது




சென்னை, ஜன.28-

சென்னை அடையாறில் சாலையோரமாக சாக்கு மூட்டையில் பீகார் இளைஞர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவத்தில் 5 தனிப்படைகள் அமைத்து விசாரித்து வந்த நிலையில் வடமாநில இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக மேலும் இருவரை தனிப்படை போலீசார் தேடி வருகின்றனர்.

## இந்திய அஞ்சல் துறையின் குறைந்த பிரிமியம் அதிக போனசுடன் ஆயுள் காப்பீட்டு பாலிசி




சென்னை, ஜன.28-

இந்திய அஞ்சல் துறையின் மூலம் பொதுமக்களுக்கு குறைந்த பிரிமியம் மற்றும் அதிக போனசுடன் ஆயுள் காப்பீட்டு பாலிசி சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு சூழல் காரணமாக பாலிசிகளை தொடங்கிய வாடிக்கையாளர்கள் தங்கள் தவணைத் தொகையை செலுத்த தவறி விடுவதால் அந்த பாலிசிகள் காலாவதியாகி விடுகிறது காலாவதியான பாலிசிகளை அபராத தொகையுடன்தான் புதுப்பிக்க இயலும். அதிக கால இடைவெளியில் பாலிசிகள் காலாவதியாகி இருப்பின் அபராத தொகையையும் அதிகமாக செலுத்த நேரிடுகிறது.

தற்போது அஞ்சல் ஆயுள் காப்பீட்டு இயக்குனரகமானது 14.01.2026 முதல் 14.04.2026 வரையிலான காலகட்டங்களில் தங்கள் காலாவதியான பாலிசிகளை புதுப்பிக்க விண்ணப்பிக்கும் வாடிக்கையாளர்களுக்கு அபராத தொகையில் 25% முதல் 30% வரை, அதாவது அதிகபட்சம் ரூ 2500 முதல் ரூ 3500 வரை விலக்கு அளிக்கும் சலுகையை அறிவித்துள்ளது. இது குறித்த மேலும் தகவல்களுக்கு 9952868107 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

வாடிக்கையாளர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி தங்கள் காலாவதியான பாலிசிகளை புதுப்பிக்க வேண்டுமாய் கோவில்பட்டி அஞ்சலக கோட்ட கண்காணிப்பாளர் செ.சுரேஷ்குமார் அழைப்பு விடுத்துள்ளார்.






■ ஈரோடு ஊராட்சி ஒன்றியம், கதிரம்பட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சியினை பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர்.

## திருவொற்றியூர் விம்கோ நகர் ரயில் நிலையத்தில் முதன்முறையாக விரைவு ரயில் நிறுத்தம்: பொதுமக்கள் உற்சாக வரவேற்பு

திருவொற்றியூர், ஜன.28-

சென்னை திருவொற்றியூர், எண்ணூர் மற்றும் மணலி பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் சென்ட்ரல் கும்மிடிப்பூண்டி மார்க்கமாக வெளிமாநிலங்களுக்கு செல்லக்கூடிய விரைவு ரயில்கள் திருவொற்றியூர் ரயில் நிலையத்தில் நின்று செல்லவேண்டும் என்று கம்யூனிஸ்ட் கவுன்சிலர் ஜெயராமன் மற்றும் சமூக ஆர்வலர்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்தனர். இதுசம்பந்தமாக வடசென்னை பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, மத்திய ரயில்வே துறை அமைச்சரை சந்தித்து மனு கொடுத்தார்.

இந்த நிலையில், திருவொற்றியூர் விம்கோ நகரில் வெளிமாநிலங்களுக்கு செல்லக்கூடிய விரைவு ரயில்கள் நின்றுச்செல்வதற்கு வசதியாக இரண்டுபுறமும் நடைமேடையை விரிவுபடுத்தும் பணிகள் நடைபெற்றுவருகிறது. இன்று காலை முதல்முறையாக ஆந்திர மாநிலம் பித்ரகுண்டாவில் இருந்து சென்னை சென்ட்ரல் வரை செல்லும் நீண்ட தூர ரயில் விம்கோ ரயில் நிலையத்தில் நின்று சென்றது. முதல் முறையாக ரயில் நின்றதால் பயணிகள் மகிழ்ச்சி அடைந்தனர். திருவொற்றியூர் சட்டமன்ற பாஜ தேர்தல் பொறுப்பாளர் ஜெய்கணேஷ், தலைமையில் நிர்வாகிகள், பொதுமக்கள் மற்றும் திருவொற்றியூர் நலச்சங்கத்தினர் ரயில் டிரைவருக்கு பொன்னாடை போர்த்தி இனிப்புகள் வழங்கினர். பயணிகளுக்கும் இனிப்புகள் வழங்கினர்.

''வடக்கே செல்லும் அனைத்து ரயில்களும் விம்கோ நகர் ரயில் நிலையத்தில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கவேண்டும்'' என திருவொற்றியூர் நலச்சங்கத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## "தேசிய ஜனநாயக கூட்டணிக்கு என்னை யாரும் அழைக்கவில்லை" ஓபிஎஸ்



மதுரை, ஜன.28-

"தேசிய ஜனநாயக கூட்டணிக்கு என்னை யாரும் இதுவரை அழைக்கவில்லை" என முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

முன்னாள் முதல்வர் ஓ பன்னீர்செல்வம் சென்னையில் இருந்து விமானம் மூலம் மதுரை வந்தார். அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறுகையில், "எனது ஒற்றை கோரிக்கை, வேண்டுகோள் என்னவென்றால், பிரிந்திருக்கும் அதிமுகவின் அனைத்து சக்திகளும் ஒன்றிணையவேண்டும். இதன்மூலம் தேர்தலை சந்திக்கவேண்டும் என்பதுதான்.

மீண்டும் ஒன்றிணையவது பற்றி ஆண்டவன் கையிலேயே உள்ளது. தேசிய ஜனநாயக கூட்டணி குறித்து என்னிடம் யாரும் பேசவில்லை. கூட்டணிக்கு என்னை யாரும் இதுவரையில் அழைக்கவுமில்லை" என்றார்.

"அதிமுகவால் 3 முறை முதல்வரான ஓபிஎஸ் தன்னை வாழவைத்த கட்சிக்கு நன்றிக்கடன் செலுத்த வேண்டிய நேரம் வந்து விட்டது" என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன், ஓபிஎஸுக்கு அழைப்பு விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது.



## கீழக்கரையில் கிழக்கு தொகுதி சார்பாக 2வது நாள் ஜல்லிக்கட்டு போட்டி அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார்

அலங்காநல்லூர் ஜன.28.-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை கிராமத்தில் அமைந்துள்ள கலைஞர் ஏறு தழுவுதல் அரங்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு மதுரை கிழக்கு தொகுதி சார்பில் இரண்டாவது நாள் ஜல்லிக்கட்டு விழா நடைபெற்றது. இந்த ஜல்லிக்கட்டு போட்டியினை வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி கலந்து கொண்டு கொடியசைத்து தொடங்கிவைத்தார். அனைத்து காளைக்கும் அண்டா, சைக்கிள், வேட்டி, துண்டு, உள்ளிட்ட பரிசுகள் மாடுபிடி வீரர்களுக்குசிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டது.

சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், அரசு அதிகாரிகள், திமுக நிர்வாகிகள், வருவாய்த்துறை, மருத்துவத்துறை, காவல்துறையினரும் கலந்து கொண்டனர்..



■ பெருந்துறை நகராட்சி குடியரசு தின விழா சேர்மன் ஓ சி வி ராஜேந்திரன் அவர்களது தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது மேலும் துணைத் தலைவர் மற்றும் பொருளாளர் எஸ் ஏ செந்தில்குமார் மற்றும் மற்றும் கவுன்சிலர்கள் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

## உலகப் புகழ்பெற்ற அருள்மிகு பழனி முருகன் கோயிலில் கொடியேற்றத்துடன் தொடங்கியது தைப்பூச திருவிழா

பழனி, ஜன.28-

தைப்பூச விழாவின் முக்கிய நிகழ்ச்சியான திருக்கல்யாணம் நிகழ்ச்சி வரும் 31ஆம் தேதியும், தைப்பூச தேரோட்டம் நிகழ்ச்சி 1ஆம் தேதி நடைபெற உள்ளது.

அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான திண்டுக்கல் மாவட்டம் பழனியில் அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலுக்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்து மட்டுமல்லாது ஆந்திரா, கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து பக்தர்கள் வருகை தருவர். தற்போது தைப்பூச விழாவையொட்டி பழனிக்கு பாதயாத்திரை பக்தர்கள் வருகை தொடங்கியுள்ளது.



இந்த நிலையில், பழனி முருகன் கோவிலில் தைப்பூச திருவிழா.நேற்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் துவங்கியது. மலை அடிவாரத்தில் உள்ள பெரியநாயகி அம்மன் கோவில் வளாகத்தில் அமைந்துள்ள கொடி மரத்தில் கொடியேற்றும் நிகழ்ச்சி நடைபெற்றது.முன்னதாக முத்துக்குமாரசாமிக்கு சிறப்பு அபிஷேகம் ஆராதனைகள் நடைபெற்றன. தொடர்ந்து மஞ்சள் நிறத்தில் சேவல், மயில் பொறிக்கப்பட்ட கொடி ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு பூஜைகள் செய்யப்பட்டு கொடி மரத்தில் ஏற்றப்பட்டது. கொடியேற்றநிகழ்ச்சியில் பழனி கோயில் இணை ஆணையர் மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேஷ், உதவி ஆணையர் லட்சுமி, அறங்காவலர் குழு தலைவர் திருப்பூர் கே.எம்.சுப்ரமணியன், அறங்காவலர்கள் சேலம் தனசேகர், சு.பாலசுப்ரமணி, ஜீ. ஆர், பாலசுப்பிரமணியம், சி.அன்னபூரணி, ஸ்ரீ கந்த விலாஸ் உரிமையாளர் செல்வகுமார், நவீன் விஷ்ணு நரேஷ் குமார், சரவணப் பொய்கை கந்தவிலாஸ் உரிமையாளர் பாஸ்கரன், கன்பத்கிரான்ட் ஹோட்டல் அதிபர் ஹரிஹரமுத்து, சாய் கிருஷ்ணா மருத்துவமனை அரிமா சுப்புராஜ், ஹோட்டல் விபிஎஸ் கிராண்ட் உரிமையாளர் வி பெரியசாமி, கோயில் அதிகாரிகள்,பக்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

மலைகோவிலுக்கு செல்போன்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டிருக்கும் நிலையில் ரோப் கார் நிலையம், மின் இழுவை ரயில் நிலையம், படிப்பாதை உள்ளிட்ட இடங்களில் சோதனை செய்யப்பட்ட பிறகு பக்தர்கள் அனு மதிக் கப்படுகிறார்கள்.மேலும் பக்தர்கள் பாதுகாப்பு கருதி கோவில் வளாகம் முழுவதும் சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. பக்தர்கள் வருகை அதிகரிக்கும் என்பதால் கூடுதலாக பஞ் ம் தயாரிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.



# இராதாபுரம் கிழக்கு ஒன்றியம் திசையன்விளை காமராஜ்நகரில் அதிமுக துண்டு பிரசுரம் விநியோகம்

இராதாபுரம், ஜன.28-

இராதாபுரம் கிழக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட கிராமங்களில் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை மத்திய அரசு நிறுத்தி விட்டதாக திமுக., அரசு பொய் பிரசாரம் செய்து வருகிறது .அதிமுக சார்பில் தற்போது மத்திய அரசு 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தை 125 நாட்களாகமாற்றி செயல் படுத்தி வருவதை, பொதுமக்களுக்கு தெரிவிக்க மாவட்டச் செயலாளர் இசக்கி சுப்பையா அவர்களின் அறிவித்தலின்படி, ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கே.பி.கே. செல்வராஜ் அவர்களின் தலைமையில், அதிமுக மாநில கழக அம்மா பேரவை துணை செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும், ராதாபுரம் கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளருமான மைக்கேல்ராயப்பன் மீஜ் MLA அவர்கள் துண்டு பிரசுரம் விநியோகம் செய்து எடப்பாடியார் அவர்கள் மீண்டும் முதல்வராக இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.

திசையன்விளை காமராஜ்நகர் ஹரிகிரிஷ்ணன் மற்றும் கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் ஏராளமானோர் இராதாபுரம் கிழக்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட திசையன்விளை காமராஜ்நகர் பகுதியில் பிரசாரம் செய்தனர்.



# குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்தில் முன்னாள் முதல்வர் அம்மா பிறந்தநாள்

குடிமங்கலம், ஜன.28-

முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் குடிமங்கலம் வடக்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட மூங்கில் தொழுவில், புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, மூங்கில்தொழுவு முத்துலட்சுமி திருமண மண்டபத்தில் பரிசுப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியில் உடுமலை சட்டமன்ற உறுப்பினரும் திருப்பூர் புறநகர மேற்கு மாவட்ட கழக செயலாளர் உடுமலை ரி. ராதாகிருஷ்ணன் அவர்கள் பரிசுப் பொருட்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் குடிமங்கலம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சி.வி.பிரனேஷ், முன்னாள் குடிமங்கலம் ஒன்றிய சேர்மன், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் திருமதி தமயந்தி மாசிலாமணி, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ ஜன.28.தென்காசி மாவட்டத்தில் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் சார்பில் தென்காசி வட்டாரத்தில் குடியிருப்பு பரூக் தொடக்கப்பள்ளியில் வைத்து நடைபெற்ற சிறப்பு பொதுக்குழு கூட்டத்திற்கு வருகை தந்து சிறப்பித்த தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணியின் மாநில பொதுச் செயலாளர் மயில் அவர்களுக்கு தென்காசி வட்டாரத்தின் சார்பாக நினைவுப் பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் தென்காசி வட்டார கிளையின் நிர்வாகிகள் மற்றும் ஆசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர்.




■ ஜன.28.தென்காசி மாவட்டம் தேன்பொத்தையில் இந்து தொடக்கப்பள்ளியில் 77வது குடியரசு தின விழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவிற்கு பள்ளி நிர்வாகி மகேஷ்குமார் தலைமையில் கொடியேற்ற நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தென்காசி அமிசோ பேமிலி ஸ்டோர் நிறுவனர் இளமுருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு குடியரசு தின விழா சிறப்பு சொற்பொழிவு நிகழ்த்தினார். பள்ளி தலைமை ஆசிரியர் சுப்புலக்ஷ்மி மாணவர்களின் கலைநிகழ்ச்சி தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் உதவிஆசிரியர்கள் ராஜலக்ஷ்மி, பேச்சியப்பன், மற்றும் பெற்றோர்கள் பலர் கலந்து கொள்ள குடியரசு தினவிழா கொண்டாடபட்டது.நிறைவில் அனைத்து மாணவர்களுக்கு இனிப்புடன் பரிசுகளும் வழங்க பட்டது.



■ குடியரசு தின விழாவில் நிலவாரப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் 2024 25ஆம் ஆண்டில் 10 ஆம் வகுப்பில் ஆங்கிலத்தில் 98, 96 (2) பெற்ற மாணவர்கட்கு 5000/ ரூ வீதம் 15,000 ரூபாய் ஊக்கத்தொகை குடும்பத்துடன் சென்று வழங்கிய நிகழ்வு.

# புளியங்குடி வீராசாமி செட்டியார் பாலிடெக்னிக் கல்லூரி குடியரசு தின விழாவில் மாநில அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு

புளியங்குடி, ஜன.28-

தென்காசி மாவட்டம் புளியங்குடியில் செயல்பட்டு வரும் எஸ். வீராசாமி செட்டியார் கல்வி குழுமங்களின் சார்பில் 77வது குடியரசு தின விழா சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு கல்வி குழுமங்களின் தலைவர் டாக்டர் வீ. முருகையா தேசியக் கொடியை ஏற்றி வைத்து சிறப்புரையாற்றினார்.



பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் இசக்கிமுத்து தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், மாநில அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோர்களுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. மேலும், எஸ். வீராசாமி செட்டியார் கல்வி அறக்கட்டளையின் சார்பில் ரூபாய் 5,000/ சிறப்பு பரிசாக வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

மாணவர்கள் எதிர்காலத்தில் மேலும் பல பதக்கங்களையும் வெற்றிகளையும் பெற்று கல்வி குழுமத்திற்கு பெருமை சேர்க்க வேண்டும் என டாக்டர் வீ. முருகையா அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்.

இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை செட்டியார் கல்வி குழுமங்களின் மேலாளர் தங்கப்பன் பிள்ளை, துறைத்தலைவர்கள், ஆசிரிய பெருமக்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



■ தென்காசி மாவட்டம், குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி வளாகத்தில், தென்காசி வனக்கோட்டம் (ம) குற்றாலம் சிறப்பு நிலை பேரூராட்சி சார்பில், நடைபெற்ற நெகிழி ஒழிப்பு விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல் கிஷோர்.இ.ஆ.ப. துவக்கி வைத்தார். உடன் மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா.ராஜ்மோகன்.இ.வ.ப. மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.



■ தென்காசி நகராட்சிக்குட்பட்ட வடக்கு ரத வீதியில் உள்ள காந்திசிலைக்கு குடியரசு தின விழாவினை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

# தேர்தலுக்கு முன்பு 'கமிஷன்' பெற அவசரகதியில் சாலைப் பணி டெண்டர்: தமிழக பாஜக குற்றச்சாட்டு

சென்னை, ஜன.28-

தேர்தலுக்கு முன்பு கமிஷன் தொகையை பெற வேண்டும் என்பதற்காக அவசர அவசரமாக சாலை பணிகளுக்கான டெண்டர் விடப்படுவதாக திமுக அரசு மீது தமிழக பாஜக குற்றம்சாட்டி உள்ளது.




இது குறித்து பாஜக மாநில செய்தி தொடர்பாளர் ஏ.என். எஸ்.பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், "மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குறிப்பிட்டது போல, இந்தியாவின் மிக ஊழல் மலிந்த அரசாக திமுக திகழ்கிறது. ஒவ்வொரு திட்டத்திலும் 20 சதவீதம் கமிஷன் என்ற "கமிஷன் ராஜ்ஜியம்" தமிழகத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்தியுள்ளது.

தற்போது தேர்தல் நிதிக்காகப் பொதுமக்களின் வரிப்பணத்தை திமுக அரசு பகிரங்கமாகச் சுரண்டி வருகிறது. கடந்த ஜன.14 ம் தேதி வெளியிடப்பட்ட அரசாணை எண் 6ன் படி, 202627 நிதியாண்டுக்கான பட்ஜெட் இன்னும் அங்கீகரிக்கப்படாத நிலையில், முன்கூட்டியே ரூ.2 ஆயிரம் கோடி மதிப்பிலான 80 சாலைத் திட்டங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சென்னை, திருவள்ளூர், மதுரை உள்ளிட்ட மாவட்டங்களில் 312.48 கி.மீ சாலைப் பணிகளுக்காக இந்த அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி நடுப்பகுதியில் தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வரும் என்பதால், அதற்கு முன்பே கமிஷன் தொகையைப் பெறுவதற்காக அவசர அவசரமாக இந்த டெண்டர்கள் விடப்படுகின்றன. தற்போது நிதி கைவசம் இல்லை. ஆனால், தேர்தல் செலவுக்காகத் தனது ஆதரவு ஒப்பந்ததாரர்களுக்குச் சாதகமாக இந்த டெண்டர்களை திமுக அரசு ஒதுக்குகிறது.

தேர்தல் அறிவிப்புக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாக மாநில அரசுகள் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் அளிப்பதையோ அல்லது டெண்டர் விடுவதையோ தேர்தல் ஆணையம் உடனடியாகத் தடை செய்ய வேண்டும்.

திமுகவின் இந்த ஊழல் பிடி தளரும் காலம் வந்துவிட்டது. முறையற்ற வகையில் விடப்படும் அனைத்து டெண்டர்களும் வரும் தேர்தலில் அமையும் புதிய அரசால் ரத்து செய்யப்படும். தமிழக மக்களுக்கு நேர்மையான ஆட்சி தேவை, கொள்ளைக்காரர்களின் ஆட்சி அல்ல" என்று அதில் கூறப்பட்டுள்ளது.












# 77 வது குடியரசு தின விழாவில் தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் தேசிய கொடியினை ஏற்றி மரியாதை

தென்காசி, ஜன.28-

தென்காசி மாவட்டம், இ.சி.ஈ. அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் (26.01.2026) நடைபெற்ற 77வது குடியரசு தினவிழா நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி.எஸ். மாதவன் முன்னிலையில் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி காவல் துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.







தென்காசி மாவட்ட காவல் துறையின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொண்டு புறாக்களை பறக்க விட்டு மூவர்ண பலூனினை வானில் பறக்க விட்டார். காவல் துறையில் சிறப்பாக பணியாற்றிய 66 காவல் ஆளிநர்களுக்கு தமிழக முதலமைச்சர் அவர்களின் காவலர் பதக்கத்தினை வழங்கினார். அதனைத் தொடர்ந்து தென்காசி மாவட்டத்தில் சிறப்பாக பணியாற்றிய பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் தன்னார்வலர்கள் என 319 நபர்களுக்கு நற்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்கள்.

உதவித்தொகை ரூ. 1,00,000 க்கான காசோலையினையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் 03 பயனாளிகளுக்கு தலா ரூ.1,05,000 வீதம் ரூ.3,15,000 மதிப்பிலான பேட்டரி பொருத்தப்பட்ட சக்கர நாற்காலிகளையும், மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் மரு. ராணி ஸ்ரீகுமார் தென்காசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பழனிநாடார் மாவட்ட வன அலுவலர் முனைவர் ரா.ராஜ்மோகன், மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயச்சந்திரன், தென்காசி சார் ஆட்சியர் வைஷ்ணவிபால்,இ.ஆ.ப, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மரு.தண்டபாணி, சங்கரன்கோவில் வருவாய் கோட்டாட்சியர் ஆ.அனிதா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) மரு.சுப்புலெட்சுமி, தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா மற்றும் அனைத்துதுறை அரசு அலுவலர்கள், காவல் துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட கலந்து கொண்டனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000